# SECONDARY SCHOOL

## END - OF - YEAR EXAMINATION - 2017

## TAMIL LANGUAGE PAPER

## SECONDARY 3 EXPRESS / 3NA

Duration:

Total Marks : 60

**Instructions to Canditates:**

1) ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.

2) தேர்வு எழுதுவதற்கு முன்னர் விடைத்தாளில் உமது பெயர் வகுப்பு ஆகியவற்றைச் சரியாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

3) அகராதி பயன்படுத்துவோர் அகராதியின் பெயரை விடைத்தாளின் முகப்பு அட்டையின் மேல் வலப் பக்கக் கோடியில் எழுத வேண்டும்.

This paper co

**SECONDARY 3 EXPRESS**

**SECONDARY 3 SET 6 /15**

More papers at www.testpapersfree.com

Estb 1957

# END - OF - YEAR EXAMINATION - 2017

## TAMIL LANGUAGE PAPER

## SECONDARY 3 EXPRESS / 3NA

நாள்:

மொத்த மதிப்பெண்கள்: 70
நேரம்: 1½ மணி

### "அ" பிரிவு

**A1** மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

**Q1** முத்து ______________________ சேமித்து வைத்த பணத்தைக்கொண்டு தம் பிள்ளையைச் சிறந்த கல்விமானாக உருவாக்கினார்.

**Q2** எப்பொழுதும் ______________________ நேரத்தைக் கழிக்கும் கந்தனை அவனுடைய நண்பர்கள் காலப்போக்கில் வெறுக்கத் தொடங்கினர்.

**Q3** மாணவர்கள் கடுமையாக உழைத்து வருங்காலத்தில் ______________ பெற்ற தலைவர்களாக விளங்கும்போது நாட்டுக்கு நலம் பயக்கும்.

**Q4** ஒருவரைப் பற்றி நன்கு தெரிந்துகொள்ளும் முன்பு ______________ அவரைப் பற்றித் தவறான கருத்துக் கூறக்கூடாது.

**Q5** ______________________ இல்லாத நாட்டில்தான் மக்கள் மகிழ்ச்சியாக வாழும் சூழல் உருவாகும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஒரு கை பார்த்து | (2) | ஒத்துப் பாடுதலில் |
| (3) | ஒப்பு உயர்வு | (4) | வாயைக் கட்டி |
| (5) | உற்றார் உறவினர் | (6) | போரும் பூசலும் |
| (7) | கழித்துக் கட்டி | (8) | அருமை பெருமை |
| (9) | எடுத்த எடுப்பில் | (10) | வெட்டிப் பேச்சில் |





More papers at www.testpapersfree.com

A2 <u>வாக்கியங்களை முடித்தெழுதுதல்</u> (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்து எழுதவும். அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். உமது விடைகளை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

Q6 காலமாறுதலுக்கு ஈடுகொடுத்துத் தன்னைத் தொடர்ந்து மாற்றிக் கொண்டதனாலேயே தமிழ் மொழி இன்றும் அழியாமல் உள்ளது.

தன்னைத் தொடர்ந்து கால மாற்றத்திற்கு ஏற்ப மாற்றிக் கொண்டிருக்காவிடில்

________________________________________________

Q7 அளவுக்கு மீறிக் கோபம் கொண்டால் அறிவு பயனற்றதாகும் என்பது பெரியோர்களின் வாக்கு.

அறிவு பயனற்றுப் போக __________________________________.

Q8 மாணவர்கள் தம் பண்பாட்டை அறிந்து அதைப் பின்பற்றுவதற்கு தாய்மொழிக்கல்வி உறுதுணையாக உள்ளது.

தாய்மொழிக் கல்வி மூலம் ______________________________.

Q9 இளையர்கள் புத்தகங்களைக் காட்டிலும் இணையம் வழி தகவல்களைச் சேகரிப்பதை எளிய வழியாகக் கருதுகின்றனர்.

இளையர்கள் தகவல்களைச் சேகரிக்க ____________

__________________________________________________.

Q10 சிங்கப்பூரில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இடங்கள் பல இருப்பதால் சுற்றுப்பயணிகள் பலர் விரும்பி வருகின்றனர்.

சுற்றுப்பயணிகள் பலர் சிங்கப்பூருக்கு விரும்பி வரக் காரணம்



More papers at www.testpapersfree.com

A3 <u>அமைப்புச் சொற்கள்</u> (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள், பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

நாம் பொழுதைப் பல வழிகளில் கழிக்கிறோம். அவற்றுள் ஒன்று சைக்கிள் எனப்படும் மிதிவண்டி ஓட்டும் பயிற்சி. ஒருகாலத்தில் வசதியற்றவர்களின் வாகனமாக மிதிவண்டி இருந்தது. இன்று மக்களில் பலர் அக்கருத்துத் தவறானது என்று புரிந்துகொண்டார்கள். நான்கு சக்கர வாகனங்கள் பல இருந்தாலும்கூட ஒருசிலர் மிதிவண்டிகளையும் விலைக்கு வாங்கி (Q11)________ ( ) ______ வருகின்றனர்.

அன்றாடம் சில மணி நேரம் மேற்கொள்ளும் மிதிவண்டிப் பயிற்சி நிச்சயம் உடலுக்குப் பல நன்மைகளை ஏற்படுத்துகிறது. அது இருதயத் தசைகளை நன்கு (Q12)________ ( )______ இருதயத்தசைகளுக்குச் செல்லும் ரத்தத்தின் அளவைப் பன்மடங்கு அதிகமாக்குகிறது. மருத்துவ ஆய்வாளர்கள் இன்று இப்பயிற்சி பற்றிப் பல ஆய்வுகளை (Q13)______ ( ) ________ வருகின்றனர். இதன் பயனாக அவர்கள் பல அரிய கண்டுபிடிப்புகளைக் கண்டறிந்து வருகின்றனர்.

நோயாளிகளின் வலுவிழந்த தசைகள் வலிமை பெறவும் உயிர் பெறவும் மருத்துவர்கள் மிதிவண்டிப் பயிற்சி அளிக்கின்றனர். சில நாடுகளில் பள்ளியில் மிதிவண்டிப் பயிற்சியை உடற்பயிற்சிக் கல்வியோடு (Q14)__________ ( ) _________. மாணவர்கள் பள்ளி நேரத்தில் மிதிவண்டிப் பயிற்சியில் ஈடுபடும்போது பாதுகாப்பைக் கடைப்பிடிப்பது அவசியம். நம்முடைய உயரத்திற்கு (Q15)________ ( ) _____ மிதிவண்டியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முக்கியமாகப் பயிற்சியின்போது தலைக்கவசம் அணிவது நல்லது.

(தழுவல்- தமிழ்முரசு நாளிதழ்)

| | | | |
|---|---|---|---|
| 1 | சிறந்த | 2 | பாதுகாத்து |
| 3 | தகுந்த | 4 | உருவாக்குவதோடு |
| 5 | ஏற்படுத்தியுள்ளனர் | 6 | வலுவாக்குவதோடு |
| 7 | பயன்படுத்தி | 8 | அமைத்து |
| 9 | இணைத்துள்ளனர் | 10 | மேற்கொண்டு |



More papers at www.testpapersfree.com

## "ஆ" பிரிவு

B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதிகளைக் கருத்தூன்றிப் படித்து, அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு விடை எழுதவும்.

வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

பகுதி 1
### பழமொழியும் மனித வாழ்க்கையும்



ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் பல அனுபவம் பெறுகிறான். அந்த அனுபவம்வழிப் பல உண்மைகளைக் கண்டறிகிறான். அந்த உண்மைகள் சொற்றொடர்களாக வெளிப்படுகின்றன. இவ்வாறு பழங்காலம் முதல் மக்கள் வழிவழியாக வழங்கி வந்த சொற்றொடர் 'பழமொழி' என்று அழைக்கப்படுகிறது. மணிக்கணக்கில் ஒருவர் நீண்ட சொற்பொழிவாற்றி ஓர் அறிவுரையை மக்களுக்கு எடுத்துச் சொல்லும்போது கேட்பவர் சலிப்படைவர். அதனால், அவர் கூறும் நல்ல கருத்துகள்கூடக் கேட்பவர்களைச் சென்றடையாமல் வளம் இல்லா நிலத்தில் பயிர்த்தொழில் செய்வதுபோல் எந்தவிதப் பயனையும் தராமல் வீணாகிவிடும். அதே நேரத்தில் சிறிய பழமொழியைக்கொண்டு சொல்லவேண்டிய கருத்தினைக் கேட்பவர்களுக்கு எளிதில் புரியும்படி எடுத்துரைக்கலாம். ஒவ்வொரு பழமொழியும் வாழ்க்கைக்குத் தேவையான கருத்தினை நமக்குத் தந்து சிந்திக்க வைக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

எடுத்துக்காட்டாக 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்ற பழமொழியின் கருத்தினைக் காண்போம். ஒருகாலத்தில் மக்கள் தங்களிடம் தேவைக்கு அதிகமாக இருக்கும் உணவுப்பொருள்களைப் பிற உயிரினங்களுக்குப் பயன்படும்படி ஆற்றில் கொட்டிவந்தனர். அப்பொருள்கள் தேவையற்றவையாக இருப்பினும் எதிர்வரும் காலத்திற்கு அவற்றைப் பற்றிய கணக்குத் தேவைப்படும் என்பதால் அவற்றையும் அளந்து கொட்டவேண்டும் என்று வலியுறுத்தினர். இக்கருத்தை உணர்த்தும்போதே இப்பழமொழி தோன்றியிருக்கக் கூடும். இதன் பொருள் அளவுக்கு மீறிய செல்வம் நம்மிடம் இருப்பினும் நாம் கணக்கு



More papers at www.testpapersfree.com

எழுதித்தான் அதனைச் செலவு செய்யவேண்டும் என்பதுவே ஆகும். எனவே, வாழ்க்கைக்குப் பயன்படும் அர்த்தமுள்ள பழமொழிகளை நாம் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும்.

<u>வினாக்கள்</u>

(Q16) பழமொழியின் உயர்ந்த தன்மை யாது?

(1) நம் வாழ்வுக்கு வேண்டிய அனுபவத்தைத் தருகிறது
(2) நம் வாழ்வுக்கு விளக்கம் தருகிறது
(3) நம் வாழ்வுக்குத் தேவையான அறிவுரை புகட்டுகிறது
(4) நம் வாழ்வுக்குத் தேவையான கருத்துகளை எண்ணச் செய்கிறது

(Q17) 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' என்ற பழமொழி எதனை உணர்த்துகிறது?

(1) ஆற்றில் பொருள்களைக் கொட்டியதை
(2) எதையும் கணக்கோடு செலவு செய்யவேண்டும் என்பதை
(3) உணவுப் பொருளின் பயன்பாட்டை
(4) நம்மிடமுள்ள அதிக செல்வத்தை

<u>பகுதி 2</u>



இன்று பெரும்பாலான மக்கள் இதழ்களை விரும்பிப் படிக்கின்றனர். இவை தினசரி, வார மற்றும் மாத இதழ்களாக உலகமெங்கும் உள்ள பல நாடுகளில் வெளிவருகின்றன. இந்த இதழ்களைப் பற்றி நன்கு அறிந்துகொள்வதற்கு இதழியல் துறை பயன்படுகிறது. இது மொழியின் வளர்ச்சிக்கு வளம் சேர்க்கும் துறைகளுள் ஒன்றாக இருக்கிறது. இதழியல் துறை அனைத்துத் துறைகளுடனும் நெருங்கிய தொடர்புடையதாக விளங்கிவருகிறது. குறிப்பாக இதனுடன் தொடர்புடைய செய்தித்தாள்கள் மிகச்சிறந்த செய்தித் தொடர்புக் கருவிகளாக மக்களுக்குப் பயன்பட்டு வருகின்றன.

செய்தித்தாள்கள் இவ்வுலகச் செய்தியை மக்களுக்குச் சுடச்சுடத் தந்து உலகத்தை மிகவும் சிறியதாக்கி விட்டன. தாய்மொழியில் வெளிவரும்



More papers at www.testpapersfree.com

செய்தித்தாள்கள் அம்மொழியைப் பேசிவரும் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. உலகில் உள்ள பல நாடுகளில் தமிழ்மொழியில் செய்தித்தாள்கள் வெளிவருகின்றன. மற்ற மொழிகளில் உள்ள கருத்துகளை மொழிபெயர்த்துத் தமிழில் எழுதும்போது புதிய சொற்கள் ஏராளமாகத் தமிழ்மொழிக்குக் கிடைக்கும். இச்சொற்கள் தமிழ்மொழியின் தொடர் வளர்ச்சிக்கு நிச்சயம் பயன்படுகின்றன.

செய்தித்தாள்களில் வெளிவருகின்ற செய்திகள் மக்களுக்குச் சென்றடைய வேண்டுமானால் அவை எளிய நடையில் இருக்கவேண்டும். மக்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்புடைய சொற்கள் அவற்றில் அதிகம் இடம்பெற்றிருக்கவேண்டும். வெளியிடப்படும் செய்திகள் மக்களின் ஆர்வத்தைத் தூண்டுவனவாக இருந்தால் படிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும். நம் நாட்டில் தமிழ் முரசு நீண்ட காலமாக வெளிவந்துகொண்டிருக்கிறது. இது தமிழர்களின் குரலாகச் சமுதாயத்தின் எண்ணங்களின் பிரதிபலிப்பாக விளங்கி வருகிறது.

(தழுவல்- இதழியல் – மொழி வளர்ச்சியும்
இதழ்களும்)

<u>வினாக்கள்</u>

(Q18) பத்திரிகைகள் இல்லாவிட்டால் ஏற்படும் முக்கியப் பாதிப்பு என்ன?

(1) பிற துறைகளுடன் தொடர்பு ஏற்பட்டிருக்காது
(2) மொழி வளமடைந்திருக்காது
(3) வார, மாத இதழ்கள் தோன்றியிருக்காது
(4) தகவல் தொடர்பு ஏற்பட்டிருக்காது

(Q19) தமிழ் மொழி இடைவிடாமல் வளரும் நிலை எப்போது உருவாகும்?

(1) அறிமுகம் இல்லாத கருத்துகளைப் பயன்படுத்தும்போது
(2) சொற்களை மொழிபெயர்த்துப் பயன்படுத்தும்போது
(3) பல நாடுகளில் தமிழ்மொழியில் செய்தித்தாள்கள் வெளிவரும்போது
(4) தமிழ்மொழி மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும்போது

(Q20) விற்பனையை அதிகரிக்கச் செய்தித்தாள் நிறுவனங்கள் எதனைக் கடைப்பிடிக்க வேண்டும்?

(1) செய்திகள் எளிய நடையில் இருக்கவேண்டும்
(2) செய்திகள் மக்களின் ஆவலைத் தூண்டவேண்டும்
(3) செய்திகள் மக்களின் பழக்க வழக்கங்களை வெளிப்படுத்தவேண்டும்
(4) செய்திகள் வாழ்க்கையோடு தொடர்பு இருக்கவேண்டும்



More papers at www.testpapersfree.com

## D5 சுயவிடைக் கருத்தறிதல் (25 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

நாம் எந்த இடத்தினை அடைய வேண்டுமானாலும் புறப்படுகின்றபோதே அதை மனத்தில் வைத்துக்கொண்டே பயணம் மேற்கொண்டால்தான் நாம் உரிய இடத்தில் சேர இயலும். இதனைத்தான் நாம் இலக்கு என்கிறோம். ஒரு குதிரை தான் போய்ச் சேருகின்ற இடம் வருகின்றவரை, அங்கும் இங்கும் பார்க்காமல் தன் கடமையையே கண் என்று கருதி ஓடிக்கொண்டிருக்கும். இந்த மனநிலைதான் தன்னம்பிக்கை உடைய ஒவ்வொருவருக்கும் தேவை.

எந்தவித உணர்வுகளும் இல்லாமல் தென் ஆப்பிரிக்காவுக்குப் பிழைப்பினைத் தேடி வந்தவர்தான் காந்தி. ஆனால் அங்கு வந்ததும்தான் இந்திய மக்களின் நிலைமைகளைக் கண்டு வேதனை அடைந்தார். இந்த அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உண்மையான உறுத்தலின் காரணமாகத்தான் 'விடுதலை என்பதே என் மூச்சு' என்ற இலக்கினை மனத்திலே பதிய வைத்தார். இது தன்னம்பிக்கையாளர்களுக்கு இருக்க வேண்டிய தனித்தகுதியாகும்.

அடுத்த பக்கம் பார்க்க

காந்தியின் இலட்சியம் என்பது விடுதலையைத் தவிர வேறு எதுவும் இல்லை. காந்திக்கு விடுதலை உணர்ச்சியைத் தூண்டிவிட்டது, தென் ஆப்பிரிக்காவில் ஏற்பட்ட சம்பவம்தான். அன்றைக்குத்தான் முடிவெடுத்தவர்தான் காந்தி நாட்டிற்கும் மக்களுக்கும் விடுதலையை வாங்கித் தர வேண்டும் என்ற இலக்கை மனத்திற்குள் தீர்மானித்தார்.

இலக்கு என்பது ஒரு மனிதனைச் சாதிக்கத் தூண்டுகிறது. இலக்கு இல்லையென்றால், மனிதர்கள் அனைவருமே பிணத்திற்குச் சமமானவர்கள். அமெரிக்காவைச் சேர்ந்த தொண்ணூற்று இரண்டு வயதான தலைமை நீதிபதி ஒருவரை அமெரிக்க அதிபர் சந்திக்கச் சென்றபோது, அந்த ஓய்வுபெற்ற நீதிபதி அந்த வயதிலும் படித்துக் கொண்டிருந்தாராம். அதிபரோ ஆச்சரியம் ததும்ப, "இந்த வயதிலுமா படித்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்குத் தலைமை நீதிபதி, தாம் ஓர் இலட்சியத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகக் கூறினார். முதுமை அடைந்தபோதும் எந்த இலட்சியத்தை மனத்திலே ஏற்றுக் கொள்கிறோமோ, அதில் இருந்து பின் வாங்காத தன்மை. இதுதான் இன்றைய இலட்சியவாதிகளுக்குத் தேவை. காந்தி இதனைத் தன் வாழ்க்கையில் இறுதிவரை கடைப்பிடித்தார்.

விடுதலையைத் தன்னுடைய இலக்காக நிர்ணயித்துக் கொண்டதால் எத்துணைத் தடைகள் வந்தபோதும் காந்தி அதிலிருந்து பின் வாங்கவில்லை. காந்தியின் அண்ணன் தன் தம்பியின் பொறுப்பற்ற, குடும்பத்தைக் கவனிக்காத நிலையைப் பார்த்துக் கடிதம் எழுதுகின்றார். அதற்குக் காந்தியோ மக்கள் சமுதாயத்தை எனது குடும்பமாக ஏற்றுக்கொண்டேன். இனி எந்த நிலையிலும் என் குடும்பத்திற்காக உழைக்கவோ, சம்பாதிக்கவோ என்னால் முடியாது என்று திட்டவட்டமாகப் பதில் கூறினார். இதிலிருந்து காந்தியின் உணர்வு, இலட்சியம், நோக்கம், அடைய வேண்டிய இலக்கு எல்லாமே மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான விடுதலை என்பதனை நம்மால் தெளிவாகச் சொல்ல முடியும். இப்படித் தெளிவான இலட்சியத்தை மனத்தில் கொண்ட காரணத்தால் காந்தி தன்னம்பிக்கை மிகுந்தவராகத் திகழ்ந்தார். (தழுவல் : காந்தியின் வாழ்வில் தன்னம்பிக்கை நெறிகள்)

Q21 ஒருவர் தன் குறிக்கோளை அடைய செய்ய வேண்டியவை யாவை? (5 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

More papers at www.testpapersfree.com

Q22 'விடுதலை என்பதே என் மூச்சு' என்ற இலக்கினை ஏன் காந்தி தன் மனத்திலே பதிய வைத்தார்? (5 மதிப்பெண்கள்)

Q23 கட்டுரை ஆசிரியர் எதை இலட்சிய வாதிகளின் தனித்தன்மையாக அடையாளம் காட்டியுள்ளார் ? (5 மதிப்பெண்கள்)

Q24 காந்தி எதற்காக மக்கள் சமுதாயத்தைத் தனது குடும்பமாக ஏற்றுக் கொண்டார் ? (5 மதிப்பெண்கள்)

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

Q25 காந்தி தன்னம்பிக்கை மிகுந்தவர் என்பதை நாம் எவ்வாறு உறுதிப்படுத்தலாம் ?

(5 மதிப்பெண்கள்)

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

**D6** <u>சொற்பொருள்</u> (5 மதிப்பெண்கள்)

**பின்வரும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக.**

Q26 இயலும் ______________________________

Q27 வேதனை ______________________________

Q28 தீர்மானித்தார் ______________________________

Q29 சமமானவர்கள் ______________________________

Q30 திட்டவட்டமாக ______________________________

(முற்றும்)



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

# TESTPAPER 6

Set 6- விடைகள்

முத்து சேமித்து வைத்த ..........

Q1. 4 Q2. 10 Q3. 8 Q4. 9 Q5. 6

Q6. . . தமிழ் மொழி இன்று அழிந்திருக்கும் .

Q7. . . அளவுக்கு மீறிக் கோபம் கொள்வதே ஆகும் என்பது பெரியவர்களின் வாக்கு.

Q8. . . மாணவர்கள் தம் பண்பாட்டை அறிந்து அதைப் பின்பற்றுகிறார்கள்.

Q9. . . புத்தகங்களைக் காட்டிலும் இணையம் வழியை எளிய வழியாகக் கருதுகின்றனர்.

Q10. . . இங்கே உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இடங்கள் பல இருப்பதே ஆகும்.

Q11. 7 Q12. 6 Q13. 10 Q14. 9 Q15. 3

Q16. 4 Q17. 2 Q18. 4 Q19. 2 Q20. 2

Q21. அடைய வேண்டிய இடத்தினை புறப்படுகின்ற போதே மனத்தில் வைத்துக்கொள்வதும், தான் போய்ச் சேருகின்ற இடம் வரும் வரை அங்கும் இங்கும் பார்க்காமல் தன் கடமையையே கண் என்று கருதுவதும் ஒருவர் தன் குறிக்கோளை அடைய செய்ய வேண்டியவை ஆகும்.

Q22. தென் ஆப்பிரிக்காவில் இந்திய மக்களின் நிலைமைகளைக் கண்டு வேதனை அடைந்ததாலும் அடிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உண்மையான உறுத்தலாலும் விடுதலையைத் தவிர வேறு எதுவும் இல்லை என்ற உணர்ச்சியாலும் 'விடுதலை என்பதே என் மூச்சு' என்ற இலக்கினை காந்தி தன் மனதிலேயே பதிய வைத்தார்.

Q23. முதுமை அடைந்தபோதும் எந்த இலட்சியத்தை மனதிலே ஏற்றுக் கொள்கிறோமோ அதில் பின் வாங்காத தன்மையையே கட்டுரை ஆசிரியர் இலட்சியவாதிகளின் தனித்தன்மையாக அடையாளம் காட்டியுள்ளார்.

Q24. விடுதலையைத் தன்னுடைய இலக்காக நிர்ணயித்துக் கொண்டதாலும் எத்துணைத் தடைகள் வந்த போதும் அதிலிருந்து பின்வாங்காததாலும் காந்தி மக்கள் சமுதாயத்தைத் தனது குடும்பமாக ஏற்றுக் கொண்டார்.

Q25. தன் உணர்வு, இலட்சியம், நோக்கம், அடைய வேண்டிய இலக்கு எல்லாமே மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான விடுதலை என்பதனை அவர் தன் மனத்தில் தெளிவாகக் கொண்ட காரணத்தால் காந்தி தன்னம்பிக்கை மிகுந்தவர் என்பதை நாம் உறுதிப்படுத்தலாம்.

Q26. முடியும

Q27. துன்பம்

Q28. முடிவெடுத்தார்

Q29. நிகரானவர்கள்

Q30. ஆணித்தரமாக, அழுத்தம் திருத்தமாக

More papers at www.testpapersfree.com